TNNG020004342026

<u>நீதித்துற நடுவர் நீதிமன்றம் எண் 2, நாகப்பட்டினம்</u>

முன்னிலை : திருமதி. C. சரளாதேவி, B.A., L.L.B.., L.L.M.,

விரைவு நீதிமன்ற நடுவர், நாகப்பட்டினம்

நீதித்துறை நடுவர் எண்.2, நாகப்பட்டினம்(முழு கூடுதல் பொறுப்பு)

2026 ம் ஆண்டு ஜுலை திங்கள் 15–ம் நாள், புதன்கிழமை

<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.151/2026</u>

<u>CNR No: TNNG02-000434-2026</u>

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண் (Name of the Police Station and Crime Number of offence) | மதுவிலக்கு அமல்பிரிவு காவல் நிலையம், நாகப்பட்டினம் குற்ற எண். 876/2025 |
| 2. | எதிரிகளின் பெயர் (Name) | கண்ணன், வயது 65/2025 த/பெ. கணேசன், கோவில் தெரு, அகரஒரத்துார், நாகப்பட்டினம். |
| 3. | எதிரிகளின் தந்தை (Father's Name) | |
| 4. | எதிரிகளின் தொழில் (Occupation) | |
| 5. | எதிரிகளின் முகவரி (Residence) | |
| 6. | எதிரிகளின் வயது (Age) | |
| 7. | குற்ற நிகழ்வு நாள் (Date of Occurrence) | 29.10.2025 |
| 8. | புகார் தேதி (Complaint date) | 29.10.2025 |
| 9. | எதிரிகள் கைது செய்யப்பட்ட | 29.10.2025 |

SARALADEVI C

Digitally signed by SARALADEVI C
Date: 2026.07.15 11:29:43 +0530

| | | |
|---|---|---|
| | நாள் (Apprehension date) | |
| 10. | எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் (Release on bail) | Station Bail<br>29.10.2025 |
| 11. | Commitment | Nil |
| 12. | Initial Questioning & Charge framing | 21.05.2026 |
| 13. | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி (Commencement of trial) | 25.05.2026 |
| 14. | விசாரணை முடிக்கப்பட்ட தேதி (Closure of trial) | 25.05.2026 |
| 15. | தண்டனை அல்லது உத்தரவு (Sentence of Order) | 15.07.2026 |
| 16. | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு(Service of copy Judgment of finding on Accused) | எதிரிக்கு எதிரான பிரிவு 4(1)(C) TNP Act –ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரியை குற்றவாளி இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்தும், எதிரியை BNSS பிரிவு 271(1)–ன் கீழ் விடுதலை செய்தும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.<br><br>இவ்வழக்கில் எதிரி மற்றும் எதிரியின் ஜாமின்தாரர்கள் எழுதிக் கொடுத்த பிணை ஆவணங்களை மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகின்றது. இவ்வழக்கில் சான்று பொருள் தாக்கல் செய்யப்படாததால் அது குறித்து உத்தரவு எதுவும் இல்லை. |
| 17. | காலதாமதத்திற்கான காரணம் (Explanation of Delay) | Nil |
| 18. | BNSS பிரிவு 351(1)(b) ன் கீழ் எதிரியை விசாரணை செய்த | 18.06.2026 |

SARALADEVI C

Digitally signed by SARALADEVI C
Date: 2026.07.15 11:29:52 +0530

| | | |
|---|---|---|
| | நாள் (Date of examination of accused U/s.351(1)(b) | |
| 19. | எதிரி தலைமறைவான விபரம் (Details of abscondence of accused) | Nil |
| 20. | எதிரியின் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் (Date of Examination in chief and cross examination of witnesses) | Witnesses / Chief / Cross:<br>PW1 25.05.2026 25.05.2026<br>PW2 25.05.2026 25.05.2026 |
| 21. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட பல்வகை மனுக்கள் (Filing of miscellaneous petitions) | --- |
| 22. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் (Date of filing of final report) | 29.10.2025 |
| 23. | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த விபரம் (Period of Remand of Accused) | --- |
| 24. | மேலமை நீதிமன்றத்தால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விபரம் (Grant of stay by superior Courts and the results thereof; and) | Nil |
| 25. | பாதிக்கப்பட்ட நபருக்கான இழப்பீடு உத்தரவு விபரம் (Details of Victim compensation order) | Nil |

**********

இவ்வழக்கானது 16.02.2026–ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 03.07.2026 ஆம் தேதியன்று என் முன்பு இறுதி

SARALADEVI C

Digitally signed by SARALADEVI C
Date: 2026.07.15 11:30:07 +0530

விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசுத்துறை வழக்கறிஞர் நிலை எண்.2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரியின் தரப்பில் வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த வாதம் மற்றும் ஆவண சாட்சியங்களை பரீசீலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்........

**தீர்ப்புரை**

29.10.2025–ம் தேதி 06.30 மணிக்கு வாஞ்சூர் சோதனைச்சாவடி அருகில் மதுவிலக்கு சோதனையில் ஈடுபட்டிருந்த போது இவ்வழக்கின் எதிரி கண்ணன் என்பவர் எவ்வித அரசு உரிமமோ, அனுமதியோ இல்லாமல் 180 ML பிடிக்கக்கூடிய கண்ணாடி சாராய பாட்டில்கள் 60–ஐ விற்பனைக்காக வைத்திருந்த குற்றம் புரிந்துள்ளதாக காவல் உதவி ஆய்வாளர், மதுவிலக்கு அமல்பிரிவு காவல் நிலையம் நாகப்பட்டினம் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானதும் அரசு தரப்பில் எதிரிக்கு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் BNSS பிரிவு 230 –ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிக்கு போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்ட பின், அரசு தரப்பு வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்து, எதிரிக்கு எதிராக சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act–ன் படி குற்றச்சாட்டு வனையப்பட்டு குற்றச்சாட்டை விளக்கி, வினவ, பொய் வழக்கு என்றும், தான் குற்றவாளி இல்லை என்றும் மறுத்துரைத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்திரவிடப்பட்டு அரசு தரப்பில் அ.சா.1, 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு,

SARALADEVI C

Digitally signed by SARALADEVI C
Date: 2026.07.15 11:30:19 +0530

அ.சா.ஆ.1 முதல் 3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் யாதொரு சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் மற்றும் சான்று பொருட்கள் குறியீடு செய்யப்படவில்லை.

<u>அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் :</u>

4. சம்பவ நாளான 29.10.2025–ம் தேதி 06.30 மணிக்கு உதவி ஆய்வாளர் திரு.முரளி அவர்கள் தலைமையில் தலைமை காவலர்கள் முருகதாஸ் மற்றும் பாரதிதாசன் ஆகியோர்கள் முன்னிலையில் வாஞ்சூர் சோதனைச்சாவடி அருகில் மதுவிலக்கு ரோந்து சென்று கண்காணித்த போது, சந்தேகத்திற்கு இடமாக வந்த பச்சை கலர் TN 51 AF 4475 என்ற பதிவெண் கொண்ட TVS XL Super 100 மோட்டார் சைக்கிளில் வந்த நபர் போலீசாராகிய தங்களை கண்டதும் வண்டியை அங்கேயே போட்டுவிட்டு தப்பி ஓட முயன்றவரை தாங்கள் தடுத்து நிறுத்தி விசாரித்தபோது இவ்வழக்கின் எதிரி கண்ணன் என தெரியவந்துள்ளது. மேலும் அவரை விசாரிக்க அவரிடம் சுமார் 180ml பிடிக்கக்கூடிய கண்ணாடி சாராய பாட்டில்கள் 60 எண்ணிக்கை வைத்திருந்தவரிடம் விசாரிக்க அவர் தன்னிடம் சாராய பாட்டில்களை வைத்திருக்க எவ்வித அரசு உரிமமோ, அனுமதியோ இல்லை என்று கூறியவரை காவல் உதவி ஆய்வாளர் அவர்களால் குற்றக் காரணம் கூறி 07.00 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் பொதுமக்கள் யாரும் முன்வராத காரணத்தினால் அன்றைய தினமே 07.30 மணியளவில் மேற்படி காவலர்கள் முன்னிலையில் காவல் உதவி ஆய்வாளர் திரு. முரளி

SARALADEVI C
Digitally signed by SARALADEVI C
Date: 2026.07.15 11:32:29 +0530

அவர்களால் அ.த.சா.ஆ.1 கைப்பற்றுதல் மகஜர் வாயிலாக பாண்டி சாராயம் கைப்பற்றப்பட்டுள்ளது.

5. பின்னர் அன்றைய தினமே 08.00 மணிக்கு மேற்படி தலைமை காவலர்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் திரு. முரளி அவர்கள் கைப்பற்றிய தடயப்பொருட்களை அ.த.சா.ஆ,2 அழிப்பு மகசர் மூலம் சம்பவ இடத்திலேயே அழிக்கப்பட்டுள்ளது. பின்னர் எதிரியுடன் 09.00 மணிக்கு நிலையம் வந்து, திரேக பரிசோதனை செய்து எதிரி மீது நாகப்பட்டினம், மதுவிலக்கு அமல்பிரிவு காவல் நிலைய குற்ற எண். 876/2025 சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act 2024–ன் கீழ் வழக்கு பதிவு செய்து அ.த.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்று ஆணங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான சங்கதிகளை தொகுத்து BNSS பிரிவு 351(1)(B)–ன் கீழ் கேள்வி எழுப்ப பொய் சாட்சி என்றும், வழக்கு குறித்து கேள்வி எழுப்ப பொய் வழக்கு என்றும் மறுத்துரைத்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என கூறப்பட்டு, சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

7. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களும் சான்றாவணங்களும் பரிசீலிக்கப்பட்டது.

SARALADEVI C

Digitally signed by SARALADEVI C
Date: 2026.07.15 11:32:37 +0530

**<u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை</u>**

8. எனவே, எதிரிக்கு எதிராக சாட்டப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

**<u>தீர்விற்கான காரணம்</u>**

9. அரசு தரப்பு வழக்குப்படி 29.10.2025–ம் தேதி 06.30 மணிக்கு வாஞ்சூர் சோதனைச்சாவடி அருகில் மதுவிலக்கு சோதனையில் ஈடுபட்டிருந்த போது இவ்வழக்கின் எதிரி கண்ணன் என்பவர் எவ்வித அரசு உரிமமோ, அனுமதியோ இல்லாமல் 180 ML பிடிக்கக்கூடிய கண்ணாடி சாராய பாட்டில்கள் 60–ஐ விற்பனைக்காக வைத்திருந்த குற்றம் புரிந்துள்ளதாக கண்டுள்ளது.

10. அ.சா.1. தலைமை காவலர் பாரதிதாசன் தனது சாட்சியத்தில் கடந்த 29.10.2025 ம் தேதி 06.30 மணிக்கு உதவி ஆய்வாளர் முரளி அவர்கள் தலைமையில் தலைமை காவலர் முருகதாஸ் மற்றும் தன் முன்னிலையில் வாஞ்சூர் சோதனை சாவடி அருகே மதுவிலக்கு ரோந்து சென்று கண்காணித்த போது சந்தேகத்திற்கு இடமாக வந்த பச்சை கலர் TN 51 AF 4475 என்ற பதிவெண் கொண்ட TVS XL Super 100 மோட்டார் சைக்கிளில் வந்த நபர் தங்களை கண்டதும் வண்டியை அங்கேயே போட்டுவிட்டு தப்பி ஓட முயன்றவரை வளைத்து பிடித்து விசாரித்தபோது இவ்வழக்கின் எதிரி கண்ணன் என தெரியவந்ததாகவும், மேலும் எதிரியை சோதனை செய்த போது சுமார் 180ML பிடிக்கக்கூடிய கண்ணாடி சாராய பாட்டில்கள் 60

SARALADEVI C
Digitally signed by SARALADEVI C
Date: 2026.07.15 11:32:45 +0530

எண்ணிக்கை வைத்திருந்தவரை விசாரிக்க தன்னிடம் எவ்வித அரசு உரிமமோ, அனுமதியோ இல்லை என்று கூறியவரை காவல் உதவி ஆய்வாளர் குற்றக் காரணம் கூறி 07.00 மணியளவில் எதிரியை கைது செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

11. மேலும் பொதுமக்கள் யாரும் முன்வராத காரணத்தினால், அன்றைய தினமே 07.30 மணியளவில் உதவி ஆய்வாளர் திரு. முரளி அவர்கள் தலைமை காவலர் முருகதாஸ் மற்றும் தன் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் வாயிலாக கண்ணாடி சாராய பாட்டில்கள் 60 எண்ணிக்கையை கைப்பற்றியதாகவும், கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், பின்னர் அன்றைய தினமே 08.00 மணியளவில் காவல் உதவி ஆய்வாளர் திரு.முரளி அவர்கள் மேற்படி தலைமை காவலர்கள் முன்னிலையில் அழிப்பு மகசர் வாயிலாக தடயத்தை கொட்டி அழித்ததாகவும், பின்னர் அன்றைய தினமே 09.00 மணிக்கு எதிரியை நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து எதிரி மீது மதுவிலக்கு அமல் பிரிவு காவல் நிலைய குற்ற எண் 876 /2025 U/s 4(1)(C) TNP Amentment Act 2024 ன் படி வழக்கு பதிவு செய்ய உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்ததாகவும், உதவி ஆய்வாளர் தன்னை விசாரணை செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

12. அ.சா.2. உதவி ஆய்வாளர் திரு. மோகன்ராஜ் தனது சாட்சியத்தில் கடந்த 29.10.2025–ம் தேதி 06.30 மணிக்கு உதவி ஆய்வாளர் திரு.முரளி அவர்கள் தலைமையில் தலைமை காவலர்கள்

SARALADEVI C
Digitally signed by SARALADEVI C
Date: 2026.07.15 11:32:53 +0530

முருகதாஸ் மற்றும் பாரதிதாசன் ஆகியோர் முன்னிலையில் வாஞ்சூர் சோதனை சாவடி அருகே மதுவிலக்கு ரோந்து சென்று கண்காணித்த போது சந்தேகத்திற்கு இடமாக வந்த பச்சை கலர் TN 51 AF 4475 என்ற பதிவெண் கொண்ட TVS XL Super 100 மோட்டார் சைக்கிளில் வந்த நபர் தங்களை கண்டதும் வண்டியை அங்கேயே போட்டுவிட்டு தப்பி ஓட முயன்றவரை வளைத்து பிடித்து விசாரித்தபோது இவ்வழக்கின் எதிரி கண்ணன் என தெரியவந்ததாகவும், மேலும் எதிரியை சோதனை செய்த போது சுமார் 180ML பிடிக்கக்கூடிய கண்ணாடி சாராய பாட்டில்கள் 60 எண்ணிக்கை வைத்திருந்தவரை விசாரிக்க தன்னிடம் எவ்வித அரசு உரிமமோ, அனுமதியோ இல்லை என்று கூறியவரை காவல் உதவி ஆய்வாளர் குற்றக் காரணம் கூறி 07.00 மணியளவில் எதிரியை கைது செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

13. மேலும் பொதுமக்கள் யாரும் முன்வராத காரணத்தினால், அன்றைய தினமே 07.30 மணியளவில் உதவி ஆய்வாளர் திரு. முரளி அவர்கள் தலைமை காவலர்கள் முருகதாஸ் மற்றும் பாரதிதாசன் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் வாயிலாக கண்ணாடி சாராய பாட்டில்கள் 60 எண்ணிக்கையை கைப்பற்றியதாகவும், கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், பின்னர் அன்றைய தினமே 08.00 மணியளவில் காவல் உதவி ஆய்வாளர் திரு.முரளி அவர்கள் மேற்படி தலைமை காவலர்கள் முன்னிலையில் அழிப்பு மகசர் வாயிலாக தடயத்தை கொட்டி அழித்ததாகவும், பின்னர் அன்றைய தினமே 09.00 மணிக்கு எதிரியை நிலையம் வந்து திரேக

SARALADEVI C
Digitally signed by SARALADEVI C
Date: 2026.07.15 11:33:02 +0530

பரிசோதனை செய்து எதிரி மீது மதுவிலக்கு அமல் பிரிவு காவல் நிலைய குற்ற எண் 876 /2025 U/s 4(1)(C) TNP Amentment Act 2024 ன் படி வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்ததாகவும் பின்னர் புலன் விசாரணையை முடித்து குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

14. இவ்வழக்கில் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருள் சாராயம் தான் என நிரூபிக்கும் பொருட்டு ரசாயன பகுப்பாய்விற்கு மாதிரி சாராயம் எடுக்கப்படவில்லை என்பது அரசு தரப்பு வழக்கின் மீது சந்தேகத்தை ஏற்படுத்தும் விதமாகவே அமைந்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே எதிரியிடமிருந்து சாராயத்தை கைப்பற்றியதற்கோ கைப்பற்றப்பட்டது சாராயம் தான் என்பதை நிரூபிக்கும் வகையில் அரசு தரப்பு வழக்கில் எந்த ஆதாரமும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

15. இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்பட்ட அனைவரும் காவல்துறையை சேர்ந்தவர்கள். தனிநபர்கள் யாரும் சாட்சியாக சேர்க்கப்படவில்லை. அ.சா.1 மற்றும் 2 வரையிலான சாட்சிகள் தங்களது குறுக்கு விசாரணையில் சம்பவயிடம் மக்கள் நடமாட்டம் நிறைந்த பகுதி என்றும் முதல் தகவல் அறிக்கை தயார் செய்யப்படுவதற்கு முன்பே அழிப்பு மகசரிலும், கைப்பற்றுதல் மகசரிலும் குற்ற எண் மற்றும் சட்டப்பிரிவுகள் குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் சரிதான் என்று சாட்சியமளித்திருப்பதும், இவ்வழக்கில் வெளிநபர்கள் யாரும் விசாரிக்கப்படாததும் அரசு தரப்பு

SARALADEVI C
Digitally signed by SARALADEVI C
Date: 2026.07.15 11:33:10 +0530

வழக்கின் மீது மிகுந்த சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ளது.

16. மேலும் குற்ற வழக்குகளை பொறுத்தவரை சம்பவம் நடந்த இடம் மாதிரி வரைபடமாக வரையப்பட்டு, அங்கிருக்கும் சாட்சிகளை விசாரித்து பார்வை மகசர் தயார் செய்யப்பட வேண்டும். ஆனால் இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரி அவ்வாறு மாதிரி வரைபடமோ, பார்வை மகசரோ, தயார் செய்யாதது இவ்வழக்கில் சந்தேகத்தை ஏற்படுத்தும் வண்ணம் அமைந்துள்ளது. அதுமட்டுமின்றி அரசுத்தரப்பில் பொதுமக்கள் யாரும் இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. மேலும் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையான சாட்சிகள் காவல் துறையை சார்ந்த சாட்சிகள் ஆவார்கள். காவல்துறை சாட்சிகளை தவிர பொதுமக்கள் யாரும் இவ்வழக்கில் காவல்துறையினரின் சாட்சியத்தை ஊர்ஜிதம் செய்ய சாட்சியாக விசாரிக்கப்படாததாலும், மேலும் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட 180ML பிடிக்கக்கூடிய கண்ணாடி சாராய பாட்டில்கள் 60 எண்ணிக்கையை இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவோ அல்லது கீழே ஊற்றி அழித்ததற்கான புகைப்படம் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. இவ்வழக்கில் மேற்கண்ட சந்தேகங்கள் எழுவதாலும் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து இவ்வழக்கில் எதிரி மீதான குற்றங்கள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றத்தால் முடிவு செய்யப்படுகிறது.

இறுதியாக, எதிரிக்கு எதிரான பிரிவு 4(1)(C) TNP Act –ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்பதால்,

SARALADEVI C
Digitally signed by SARALADEVI C
Date: 2026.07.15 11:33:18 +0530

எதிரியை குற்றவாளி இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்தும், எதிரியை BNSS பிரிவு 271(1)–ன் கீழ் விடுதலை செய்தும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

இவ்வழக்கில் எதிரி மற்றும் எதிரியின் ஜாமின்தாரர்கள் எழுதிக் கொடுத்த பிணை ஆவணங்களை மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகின்றது. இவ்வழக்கில் சான்று பொருள் தாக்கல் செய்யப்படாததால் அது குறித்து உத்தரவு எதுவும் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிறகு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15–ஆம் நாள் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SARALADEVI C

Digitally signed by SARALADEVI C
Date: 2026.07.15 11:33:24 +0530

நீதித்துறை நடுவர் எண்.2 (மு.கூ.பொ)

நாகப்பட்டினம்

**இணைப்பு:**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. பாரதிதாசன் ( தலைமை காவலர் ) |
| அ.சா.2 | திரு. மோகன் ராஜ் (உதவி ஆய்வாளர்) |

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் :**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 29.10.2025 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.2 | 29.10.2025 | அழிப்பு மகசர் |
| அ.சா.ஆ.3 | 29.10.2025 | முதல் தகவல் அறிக்கை |

**அரசு தரப்பில் சான்றுபொருட்கள் :**

இல்லை.

**எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள் –**

இல்லை

SARALADEVI C

Digitally signed by SARALADEVI C
Date: 2026.07.15 11:33:36 +0530

நீதித்துறை நடுவர் எண்.2(மு.கூ.பொ)
நாகப்பட்டினம்.

நகல் :

மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர், நாகப்பட்டினம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

1. இந்த தீர்ப்புரையின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. இந்த வழக்கில் எந்த சாட்சியும் விசாரணைக்காக 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. இந்த வழக்கின் எதிரி விசாரணையின் போது பிணையில் இருந்தார்.
4. இவ்வழக்கில் சான்று பொருள் தாக்கல் செய்யப்படாததால் அது குறித்து உத்தரவு எதுவும் இல்லை.